



# சார்லஸ் டார்வினும்
## வேதாத்திரி மகரிசியும்.


அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

www.banukumar.in

# சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரிசியும்

மனிதன் எப்படி தோன்றினான் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்தது உண்டா?

ஏதாவது ஒரு காலகட்டத்தில் எல்லோருக்கும் உதிக்கும் ஒரு கேள்விதான் அது. கிட்டதட்ட எல்லா மதங்களும்- கடவுள்தான் மனிதனை படைத்தார் என்கின்றன.

எனவே- மத நம்பிக்கையற்ற சிறுபான்மையினரைத் தவிர்த்து -உலகின் பெரும்பான்மையினர் -தங்களை கடவுளின் படைப்பு என்று அன்றும் நம்பினர், இன்றும் நம்புகின்றனர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்த அந்த சித்தாந்தத்தை தூக்கி எறிந்தது- இன்னொரு சித்தாந்தம் 1859 ஆம் ஆண்டு பிறந்தது.

"ஆறு நாட்களில் கடவுள் மனிதனை படைத்தார்"- "குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" – என்ற பைபிளின் கூற்றை நம்பியிருந்த காலகட்டம்.

அந்த நேரத்தில், மனிதன் குரங்கிலிருந்துதான் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற புரட்சிகரமான சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டவர் சார்லஸ் டார்வின்.

டார்வின் தனது ஆய்வில் ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை ஒவ்வொரு உயிரனமும் எவ்வாறு மாற்றம் அடைந்து அடுத்த கட்ட உயிரினமாக உருவாகிறது என்பதை விளக்குகிறார்.

இவரது ஆய்விற்கு இயற்கைத் தேர்வு ( Natural Selection )எனப் பெயரிட்டுள்ளார்.

பரிணாம வளர்ச்சி சித்தாந்தத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார் சார்லஸ் டார்வின்.

இயற்கைத் தேர்வு ( Natural Selection ) என்னும் முறையின் வாயிலாக ”உருமலர்ச்சி” ( Evolution ) ஏற்படுகிறது என்னும உயிரியல் கோட்பாட்டினை வகுத்த ஆங்கில விஞ்ஞானி சார்லஸ் டார்வின் ஆவார்.

## டார்வினும் வேதாத்திரியும். சிறிய ஒப்பாய்வு.

இங்கிலாந்தில் தோன்றியவர் விஞ்ஞானி சார்லஸ் டார்வின். இந்தியாவில் அவதரித்தவர் மெய்ஞ்ஞான விஞ்ஞானி வேதாத்திரி மகரிசி.

1809-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் நாள் இங்கிலாந்தின் Shrews-bury என்ற நகரில் பிறந்தார் டார்வின்.

வேதாத்திரி மகரிசி 1911 ஆம் அண்டு இந்தியாவின் தமிழகத்தில் கூடுவாஞ்சேரி கிராமத்தில் பிறந்தார். 2006 ஆம் ஆண்டு வரை 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.

டார்வின் கி.பி 1882 ஆம் ஆண்டு வரை 73 ஆண்டுகள் வரை வாழந்தார்.

தமது 22-ஆவது வயதில் இறையியலில் பட்டம் பெற்றார். அப்போது அதே பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் துறையில் பேராசிரியராக இருந்த John Stevens Henslow என்பவரிடம் நெருங்கிய நட்பு கொண்டார் டார்வின்.

அப்போதெல்லாம் மயக்க மருந்தின்றி அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதால் அந்தக் குழந்தை பட்ட வேதனையைக் கண்டும், கேட்டும் மருத்துவத்தின் மீது இருந்த ஆர்வத்தை இழந்தார் டார்வின்.

வேதாத்திரி மகரிசி- மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார். குடும்பத் தொழிலான நெசவுத் தொழில் செய்து வந்தார்.

## டார்வின் வாழ்க்கை வரலாறு (கி.பி. 1809-1882)

1809-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் நாள் இங்கிலாந்தின் Shrews-bury என்ற நகரில் பிறந்தார் டார்வின். சிறு வயதிலேயே அன்னையை இழந்தார்.

அவரது தாத்தாவும் தந்தையும் மருத்துவர்களாக இருந்தவர்கள். அதனால் டார்வினையும் மருத்துவம் படிக்க எடின்பர்க் (University of Edinburgh) பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தார் தந்தை.

சிறு வயதியிலிருந்தே டார்வினுக்கு புழு, பூச்சிகள், விலங்குகள் ஆகியவற்றின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது.

எடின்பர்க் சென்ற பிறகும் அவர் கற்கள், செடிகள், புழு, பூச்சிகள் ஆகியவற்றை சேமிக்கத் தொடங்கினார்.

இயற்கையின்மீது அப்படி ஒரு ஈடுபாடு அவருக்கு. மருத்துவம் படித்துக்கொண்டிருந்தபோது ஒருமுறை ஒரு குழந்தைக்கு அறுவை சிகிச்சை நடப்பதை பார்க்க வேண்டிய கட்டாயம் டார்வினுக்கு ஏற்பட்டது.

அப்போதெல்லாம் மயக்க மருந்தின்றி அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டதால் அந்தக் குழந்தை பட்ட வேதனையைக் கண்டும், கேட்டும் மருத்துவத்தின்மீது இருந்த ஆர்வத்தை இழந்தார் அவர்.

தந்தைக்கு ஏமாற்றமாக இருந்தாலும் அடுத்து அவரை natural 'theology' அதாவது 'இறையியல்' பயிலுமாறு ஆலோசனை கூறினார்.

அதனை ஏற்று கேம்ஃப்ரிட்ஜ் (University of Cambridge) பல்கலைக்கழகத்தில் சமய குருவுக்கான படிப்பில் சேர்ந்தார் டார்வின்.

கேம்பிரிட்ஜில் படிப்பதைவிட குதிரைச் சவாரி, துப்பாக்கி சுடுதல் போன்ற விளையாட்டுகளிலேயே அவர் அதிக ஆர்வம் காட்டினார்.

தமது 22-ஆவது வயதில் இறையியலில் பட்டம் பெற்றார். அப்போது அதே பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் துறையில் பேராசிரியராக இருந்த John Stevens Henslow என்பவரிடம் நெருங்கிய நட்பு கொண்டார் டார்வின்.

அவர் மூலமாக கேப்டன் Robert FitzRoy என்பவரின் நட்பு கிட்டியது. தென் அமெரிக்க கடலோரப் பகுதிகளில் ஆய்வு செய்ய HMS Beagle என்ற கப்பல் புறப்படவிருந்தது.

கேப்டன் Robert FitzRoy-யின் தலைமையில் செல்லவிருந்த அந்தப் பயணத்தில் கலந்துகொள்ளுமாறு டார்வினுக்கு அழைப்பு வந்தது.

அதனை ஏற்றுக்கொண்டு 1831-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி கேப்டன் பிட்ஸ்ராயும், டார்வினும் பயணத்தைத் தொடங்கினர்.

ஐந்து ஆண்டுகள் நீடித்த அந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த பயணம்தான் பரினாம வளர்ச்சி சித்தாந்தம் உருவாவதற்கு அடிப்படை காரணமாக அமைந்தது.

அந்தப் பயணத்தைத் தொடங்கியபோது டார்வினுக்கு வயது 22.

ஐந்து ஆண்டுகளில் அந்தக் கப்பல் Brazil, Rio de Janiro, Mondivideo, Falkland Island, Galapagos Island, Hobart, Newzealand என உலகையே ஒரு வலம் வந்தது. பல இடரும், இன்னல்களும் நிறைந்ததாக அந்த பயணம் அமைந்தது.

ஆனால் இயற்கையின் மீது இருந்த அளவிடமுடியாத ஈடுபாட்டால் டார்வினுக்கு அது பெரும் துன்பமாக படவில்லை.

சென்ற இடத்தையெல்லாம் கூர்ந்து ஆராய்ந்த டார்வின் அதுவரை அறியப்படாத பல விநோதமான விலங்குகளின் எலும்புகளை சேகரித்தார்.

ஊர்வன, நடப்பன, பறப்பன என எல்லாவித உயிரினங்களையும் ஆராய்ந்தார்.

அவை இடத்துக்கு இடம் மாறுபட்டிருப்பதையும், சில ஒற்றுமைகளை கொண்டிருப்பதை கண்டு வியந்தார் டார்வின்.

உயிரினங்கள் அனைத்துமே பொதுவான மூதாதையர்களின் வழிதோன்றல்களாக இருக்குமா என்பதும், அவை தொடர்ச்சியாக சிறு

சிறு மாற்றங்களைப் பெற்று, தற்போதைய வளர்ச்சியை பெற்றிருக்கின்றனவா? என்பதுதான் டார்வினின் கேள்வியாக இருந்தது.

தான் சேகரித்த சில எலும்புகளுக்குச் சொந்தமான விலங்குகள் முற்றாக அழிந்து போயிருக்கும் என்று முதலில் யூகித்தார்.

ஆனால், பின்னர் அந்த விலங்குகளிலிருந்துதான் தற்போதைய சிறிய அளவிலான விலங்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்று பகுத்தறிந்தார்.


கெலபகஸ் (Galapagos Island) தீவுகளில் புதிய வகையான பறவைகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கண்டு அதிசயித்தார்.

இப்படி பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு 1836-ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார் டார்வின்.

ஐந்து ஆண்டுகளில் தான் சேகரித்த விபரங்களையும், ஆய்வுகளையும் வைத்து அவர் The voyage of the Beagle என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

தமது 30-ஆவது வயதில் Emma Wedgwood என்ற உறவுக்காரப் பெண்ணை மணந்து கொண்டு, ஏழு பிள்ளைகளுக்கு தந்தையானார் டார்வின். திருமணத்திற்கு பின்பும் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார்.

புதிய உயிரினங்கள் உருவாகும் முறை, பின்னர் அவை தங்களின் மூலத்திலிருந்து முழுமையாக மாறி விடுவதன் காரணங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து 1859-ஆம் ஆண்டு உலகை வியப்பில் ஆழ்த்திய தனது புத்தகத்தை வெளியிட்டார் டார்வின்.



"The Origin of Species by Natural Selection" அதாவது 'இயற்கையில் உயிரினங்களின் தோற்றம்' என்ற சார்லஸ் டார்வின் அந்த புத்தகம் கூறிய சித்தாந்தம்தான் பரிணாம வளர்ச்சி சித்தாந்தம்.

அதன்படி உயிரினங்களின் வாழ்க்கைப்

போராட்டத்தில் தகுதியும், வலிமையும் உள்ளவை நிலைத்து நிற்கும். மற்றவை அழிந்துபோகும் என்று கூறினார் டார்வின்.

அதை 'Natural Selection' என்றும் "survival of the fittest" என்றும் அவர் விளக்கினார். ஆனால் அந்த சித்தாந்தத்தின் விளைவை உலகம் அப்போது உணரவில்லை.

செடிகொடிகளுக்கும், விலங்குகளுக்கும் மட்டுமே அது பொருந்தும் என்றுதான் நம்பியது. டார்வின்கூட மனிதனைப் பற்றி புத்தகத்தில் எதுவும் குறிப்பிடவில்லை.

பரிணாம வளர்ச்சி சித்தாந்தம்- மனிதனுக்கும் பொருந்த வேண்டும் என்பதை- உலகம் உணரத் தொடங்கியபோது- நாம் குரங்கிலிருந்து பிறந்தோமா? என்ற கேள்வி எழுந்தது.

டார்வின் -அப்படி நேரடியாக சொன்னதில்லை நம்பியதுமில்லை.

ஆனால்- அறிவுப்பூர்வமாக சிந்தித்துப் பார்த்தால்- அப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதத் தொடங்கினர்.

எதிர்பார்க்கப்பட்டது போலவே- தேவாலயங்களின் கண்டனத்துக்கு உள்ளானது டார்வினின் சித்தாந்தம்.

அவர் வாழ்ந்த போதே அவரது "The Origin of Species" என்ற நூல் உலகம் முழுவதும் பதிக்கப்பட்டது.

கேம்ஃப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது.

**டார்வின் பரிணாம கோட்பாடு மூன்று அம்சங்களைக் கொண்டது.**

1. மாறுபாடு (எல்லா உயிரினங்களிலும் காணப்படுவது)
2. மரபு வழி (ஒத்த உயிர் வடிவத்தை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல்)
3. உயிர் வாழ்தலுக்கானப் போராட்டம் (எந்தெந்த மாறுதல்கள் ஒரு குறிப்பிட்ட சூழலுக்குச்சாதகமாக இருக்கும் என்று கணித்து

அதற்கேற்ப இனப் பெருக்க முறைகளை தீர்மானித்துஉயிரினங்களில் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்வது)

இதைத்தான் இன்றைய நாகரீக, விஞ்ஞான உலகம் அதன் நீட்சியாக பரம்பரை மரபியல் குணங்களின் மகிமைப் பற்றி நமக்கு விளக்கம் தருகிறது.

இதை 'நவீன டார்வினியம்' என்கிறார்கள்.

இதன் விளக்கம் என்பது, ஜீவ போராட்டம் என்பது தனித்தனியான பொருளைப் பொறுத்தது மட்டுமல்ல;

தன் இனத்தை உற்பத்தி செய்து இனவிருத்தி செய்யும் (குணம்,உடல்வாகு, நிறம், திறமை, அறிவு இவையும் உள்ளடங்கும்) சக்தியைப் பொறுத்ததாகும் என்பது தான்.

"வலுவுள்ளது வாழ்கிறது, மெலிந்தது வீழ்கிறது" என்கிற இவரின் பரிணாம தத்துவத்தை . சிலர் அவர் காலத்திலேயே கேலி செய்தார்கள்.

உண்மையை கண்டுபிடித்த சாதனையாளர்களை, எல்லாம் உலகம் கேலி செய்வது வாடிக்கைத்தானே?

*"உலகை கூர்ந்து கவனிப்பதையும், ஆராய்ச்சிகள் செய்வதையும் நிறுத்துமாறு எப்போது நான் நிர்பந்திக்கப்படுகிறேனோ அன்றைய தினமே நான் இறந்து போவேன்". என்று கேலி செய்தவர்களுக்குப் பதிலளித்தார் டார்வின்.*

மனுகுல மூதாதையரின் முகவரியை -உலகிற்குக் காட்டிய முன்னோடி, அறிவு ஒளி 1882-ஆம் ஆண்டு ஏப்ரல்19-ஆம் தேதி தனது சிந்தனையை நிறுத்தி அடங்கிப் போனார்.

இங்கிலாந்தில்- 'விஞ்ஞானிகளின் கார்னர்' என்று சொல்லப்படும் வெஸ்ட்மின்ஸ்டர் எபியில் (Westminster Abbey)-டார்வினின் நல்லுடல் அடக்கம் செய்யப்பட்டது

## வேதாத்திரி மகரிசி வாழ்க்கை குறிப்பு (கி.பி.1911-2006)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பசூழல்,  இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

## ஆன்மிகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.

இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35வது வயதில் ஞானம் பெற்றார்.

அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில்- பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை- தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர்- தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு- தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

## நூல்கள் இயற்றல்

இந்தப்பிரபஞ்சத்தைப் பற்றியும்- மனித வாழ்க்கையைப் பற்றியும்- தவநிலையில்- தான் பெற்ற கருத்துக்களை -பல கவிகளாகவும், கட்டுரைகளாகவும்- புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட- விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த- தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில்- எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார்.

எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை -மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி ‘உலக சமாதானம்’ என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு- இவருக்கு கிட்ட - அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட- 1958-ஆம் ஆண்டில் - வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்- இன்று இந்தியாவிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.


## அருட்பெருஞ்சோதி நகர்

கொங்கு நாட்டில்- பொள்ளாச்சி நகருக்கு அருகே- வால்பாறை மலையோரத்தில்- ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில்- அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம்- வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் -ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

## மறைவு

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.




## "வல்லனவற்றில் வாழ்வு வளம்"

காண்பனவற்றில் உண்மையைத் தேடும் ஆர்வம், புரியாதவற்றையும் அணுக்கமாக ஆராயும் பொறுமை, மத நம்பிக்கையின் ஆணி வேரையே அசைக்கும் என்றும் தெரிந்தும் தாம் உண்மை என்று நம்பியவற்றை அச்சமின்றியும், தயங்காமலும் உலகுக்கு சொன்ன துணிவு.

இவைதான் டார்வின் என்ற

மாமனிதனுக்கு வானம் வசப்பட்டதற்கான காரணங்கள்.

டார்வினின் கொள்கைகளின் விளைவாக, "**மாறுதல் ஒன்றைத் தவிர இந்த உலகில் நிலையானது எதுவுமே இல்லை**" என்று **உறிராக்ளிட்டஸ்** கூறிய கருத்து இன்று எல்லோரும் ஏற்கத் தக்கதாகிவிட்டது.

"**வல்லனவற்றில் வாழ்வு வளம்**" **( Survival of the Fittest )**
"**வாழ்க்கைப் போராட்டம்** " **( Struggle for existence)** என்பன போன்ற டார்வின் வகுத்தமைத்த சொற்றொடர்கள் எல்லா மொழிகளின் அகராதிகளிலும் இடம் பெற்றுவிட்டன.

உயிரியலையும், மானிடவியலையும் புரட்சிகரமாக மாற்றியமைத்தது டார்வினுடைய கொள்கைகளேயாகும்.

இந்த உலகில் மனிதனுக்குரிய இடம் குறித்த மனிதரின் கருத்தினை மாற்றியதும் இந்தக் கொள்கைகளேயாகும். இதில் ஐயமேதுமில்லை.

## சார்லஸ் டார்வின் தந்த பரிணாமக் கொள்கையும் வேதாத்திரியின் தன்மாற்றக் கொள்கையும்..

டார்வின் பரிணாமக் கொள்கை ஓரறிவிலிருந்து ஆரம்பிக்கிறது. ஆனால் வேதாத்திரியின் தன்மாற்றக் கொள்கை மூலமாகிய பெருவேளியில் (சுத்தவெளி) தொடங்குகிறது.




டார்வின் தனது ஆய்வின் ஒருறிவிலிருந்து ஆறறிவுவரை ஒவ்வொரு உயிரனமும் எவ்வாறு மாற்றம் அடைந்து, அடுத்த கட்ட உயிரினமாக உருவாகிறது என்பதை விளக்குகிறார்.

இவரது ஆய்விற்கு இயற்கைத் தேர்வு ( Natural selection) எனப் பெயரிட்டு அழைத்தார்.

## இயற்கைதேர்வுக் கோட்பாடு,

இக்கோட்பாட்டின் கூறுகள். 1. மிதமிஞ்சிய இனப்பெருக்கம் 2. வாழ்க்கைப் போராட்டம் 3. பரவலான வேறுபாடுகள் 4. தகுதியானவைத் தப்பிப் பிழைத்தல் 5. இயற்கைத் தேர்வு.

1. மதிமிஞ்சிய இனப்பெருக்கம் - தங்களைப் போன்ற பின் சந்ததியை உருவாக்கும் உள்ளுணர்வு அனைத்து விலங்குகளுக்கும் உண்டு. இதனால் அவை தங்களது சந்ததியினை ஜியோமிதி விகிதத்தில் பெருக்கமடையச் செய்யும் தன்மையும் கொண்டிருக்கும்.
2. வாழ்க்கைப் போராட்டம் உயிர் வாழ அனைத்து உயிர்களும் போராட்டச் சூழலைச் சந்திக்க வேண்டியுள்ளது. இத்தகையப் போராட்டம் ஒரே இனம் சார்ந்த உயிர்களிடையிலே அல்லது இரு மாறுபட்ட இனங்களிடையிலோ ஏற்படும்.
3. பரவலான வேறுபாடு தனிப்பட்ட உயிர் மற்றும் உயிரினங்கள் செழித்து தனது நன்மை பயக்கும் உயிரினப் பண்புகளை தனது அடுத்த தலைமுறைக்குச் செலுத்தும் உயிரினத் தொகையில் நிலைநிறுத்தபடும் பாரம்பரிய வேறுபாடுகளே பரிணாமத்தின் அடிப்படைத் தேவைகளாகின்றன.
4. தகுதியானவைத் தப்பிப் பிழைத்தல் அனைத்து உயிரனங்களும் வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்திக்கின்றன. அவற்றில், உரிய மாறுபாடுகள் கொண்டவை மட்டுமே தப்பித்து வாழ இயலும். அத்தகைய உயிர்கள் சூழலிலே மிகத் தகுந்தனவாகக் கருதப்பட்டு அப்பண்புகள் சூழல் தன்மைகளுக்கேற்ப மேலும் மாறுதல்களைப் பெறும்.
5. இயற்கைத் தேர்வு டார்வினின் கருத்துப்படி மிகச் சிறந்தது எனக் கருதப்படும் உயிர்கள் இயற்கைத்

தேர்வினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாழும் தகுதியைப் பெறுகின்றன எனலாம்.

இயற்கைத் தேர்வு கருத்துருவைப் பயன்படுத்தி அனைத்து வகையான பரிணாம நிகழ்வுகளையும் விளக்கிவிட இயலும் என் டார்வின் நம்பினார்.

தொடரும்......

நன்றி - சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரிசியும் - அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

## டார்வினும் வேதாத்திரியும்.

### வேதாத்திரி மகரிசியின் தன்மாற்ற-பரிணாமக் கொள்கை.

இறைநிலை என்ற முழு முதற்பொருளானது - 1. வற்றாயிருப்பு 2. பேராற்றல் 3. பேரறிவு 4. காலம் என்ற நான்கு வளங்களைக் கொண்டு பெருவெளியாக, சுத்தவெளியாக நிறைந்து விரிந்து நிற்கிறது.

இதன் தன்னிறுக்கச் சூழந்தழுத்தும் ஆற்றலால் தானே நுண்துகளானது. இதுவே இறைத்துகள் எனப்படுகிறது. இறைத்துகள்களின் தொகுப்பே விண்.




விண் எனும் நுண்ணணுக்கள் ஒன்றை மற்றொன்று தள்ளுகிற ஆற்றல் குறையும் போது அவைகள் நெருங்குகின்றன.

நெருக்கத்தின் அழுத்தத்திற்கு ஏற்ப காற்று, அழுத்தக் காற்று (நெருப்பு), நீர், நிலம் என்று விணகள் கூட்ட இயக்கத்தின வேறுபாடுகள் உண்டாகின்றன. இந்த நான்கோடு

விண்ணையும் சேர்த்து பஞ்ச பூதங்கள் எனப்படுகின்றன.

பஞ்ச பூதங்களின் சரிவிகிதக் கலவையால் சீவ இனங்கள் தோன்றியது. தாவரங்கள் தோல் மூலம் அழுத்தம் என்ற உண்ர்வைப் பெறுகின்றன. அதனால் அவை ஓரறிவு இனம் எனப்படுகிறது.




புழு அழுத்த உணர்வும் சுவையுணர்வும் உடையது. அதனை ஈரறிவு என்று மதிக்கிறோம்.

எறும்பு, வண்டுகள் அழுத்தம், சுவை, மணம் என்ற மூன்று உணர்வுகளைப் பெற்றிருக்கின்றன. எனவே இவை மூவறிவு இனமாக பேசப்படுகின்றன.

ஊர்வனவற்றில் கண்களிலிருந்து, காதுகள் இல்லாதவற்றை (பாம்பு முதலியன) நான்கு அறிவு உயிரினம் என்று அழைக்கிறோம்.

இத்துடன் காதும் உள்ள உயிர் வகையை ஐயறிவு என்றும் கருதுகிறோம்.


ஆகவே நிற்பன, நடப்பன, ஊர்வன, நீந்துவன அனைத்தும் ஐயறிவு உயிர்களாகும்.

புலன்களுக்கு எட்டாத காலம், தொலைவு, விரைவு, பருமன் எனும் நான்கு கணக்குகளுக்கு அகப்படாத மறைபொருட்கள் மூன்று. அவை பேரியக்க மண்டலம் முழுவதும் நிரம்பியுள்ளன.

அவை 1. இறைவெளி 2. விண்துகள் 3. காந்த ஆற்றல். இந்த மூன்றையும் உணர்ந்து கொள்ளும் கருவி மனித மூளைதான்.

இந்த அற்புத ஆற்றல்தான் ஆறாவது அறிவு ஆகும். ஆறாவது அறிவு போதிய வளர்ச்சி பெற்றால்தான் மனிதனுக்குப் பிறரை

மதித்து ஒத்தும் உதவியும், இட்டுண்டு வாழும் ஏற்றமுள்ள அறிவாட்சித்தரம் பண்பாடாக அமையும்.




எனவே, ஏதோ ஒரு ஆற்றல் உலகைப் படைத்து பாதுகாத்து பராமரித்து வருகிறது என்ற கருத்தைவிட, இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தில் காணும் பொருட்களாகவும், அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பேருண்மையை உணர்த்துவதே **வேதாத்திரி மகரிசி தரும்**

## தன்மாற்றச் சரித்திரம்.

ஓரறிவு ஜீவனில் இயல்பூக்கமாக ஏற்படும் மாற்றம் தொடர்ந்து நடைபெற்று ஆறறிவு படைத்த மனிதனை உருவாக்கியருக்கிறது என்பது டார்வின் தந்த தத்துவமாகும்

இந்தத் தொடர் மாற்றங்களின் ஊடாக ஒன்றே ஒன்று ஒவ்வொரு ஜீவனிலும் வாசம் செய்து- அடுத்தடுத்து ஜீவன்களுக்குத் தாவி அனைத்து ஜீவன்களையும் இணைக்கிறது.

**அந்த ஒன்றான கருமையம் அல்லது ஜீவாத்மாவைப் பற்றி டார்வின் தத்துவம் பேசவில்லை.**


ஆனால் வேதாத்திரியின் பரிணாமம் அல்லது தன்மாற்றச் சரித்திரம் அந்த ஒன்றைப் பற்றி தெளிவாக வெகுவாகப் பேசுகிறது

**”முன்னம் ஒரு துளியான மூலவிந்து நாதத்தால்**

**முற்றறிவன் திருவருளால் முழுமையாய் எனது உடல்**

**சூக்குமமாய் குறுகிநின்று தொடங்கியது தன் வளர்ச்சி**

**சொல்லறிய மறை பொருளாய் தொடர்ந்து வரும் வினைக்கேற்ப...........” (ஞா.க.)**




என்பார் வேதாத்திரி மகரிசி. ஒன்றிலிருந்து ஒன்று வருவதை அந்த ஒன்று பரிணாமம் அடைகிறதென்று சொல்கிறோம்.

விலங்கினத்திலிருந்து (குரங்கிலிருந்து) மனிதன் வருகிறான் என்று சொல்வதில் மனிதனின் பெருமை அவ்வளவாக வெளிப்படவில்லை.

மனிதன் விலங்கினத்திலிருந்து வந்தான் என்று சொல்வதைவிட- இறைநிலையே தானே மாற்றம் அடைந்து மாற்றம் அடைந்து-- விலங்கினம் மூலமாக-- மனிதனாக வருகிறதென்று சொல்வது- பொருத்தமாக இருக்கும் என்பார்.

வேதாத்திரி மகரசி --கடைசி காலங்களில் ஒன்றிலிருந்து என்று பொருள் பரிணாமம் என்ற பதத்தைத் தவிர்த்து, இறைநிலையாகிற வெளி --தானே தன்னை மாற்றிக் கொண்டு- மனிதனாகியிருக்கிறது என்னும் பொருள்பட- பரிணாமம் என்னும் வார்த்தைக்குப் பதிலாக ”தன்மாற்றம்” என்னும் பதத்தைக் கையாளத் தொடங்கினார்.

சார்லஸ் டார்வின் விஞ்ஞானத் தத்துவம்- வேதாத்திரிய மகரிசியின் விஞ்ஞான மெய்ஞ்ஞானத் தத்துவமாக மாறியிருப்பது-- அறிவின் பயணத்தில் உச்சக் கட்டமாகும்.

## துணைநின்ற நூல்கள்


1. உயிரினங்களின் தோற்றம், சார்லஸ் டார்வின்
2. *On The Origin of Species (Chinthan Books)* ***Charles darvin***

3. *The Origin of species* ***Charles darvin***
4. சார்லஸ் டார்வின்: சுயசரிதை சார்லஸ் டார்வின்
5. இயற்கையின் தேர்வின் வழியாக உயிரினங்களின் தோற்றம்
6. பிரபஞ்ச பரிணாம சரித்திரம், வேதாத்திரி மகரிசி.
7. தத்துவ சிகரங்கள், டாக்டர் அழகர் ராமானுஜம்
8. இறைநிலயின் தன்மாற்ற சரித்திரம், வேதாத்திரி மகரிசி
9. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி
10. அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி மகரிசி.

## இணையதளத்தில் ஜென்புத்தரும் தாயுமானவரும்

இணையதள முகவரிகள்….. VETHATHIRIAM BANUKUMAR மற்றும் THAYUMANAVAR BANUKUMAR

ஜென் புத்தரும் தாயுமானவரும்

பொருளடக்கம்

1. ஜென்னும் தாயுமானவரும். https://youtu.be/LXgKxgHMtFo
2. விஷய ஞானம் விபரீதமானது https://youtu.be/VliywleKo6Y
3. மரணத்தைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை https://youtu.be/At5zMeJavF8
4. படிப்புஅற்றுக் கேள்விஅற்று https://youtu.be/n0_ZEytgHXM
5. வார்த்தைகளால் விளக்க முடியாது
6. செத்தால் தான் தெரியும்? https://youtu.be/WynKLPhhFoU
7. வழியும் கோப்பை. https://youtu.be/o4eI_2ySwzQ
8. பாலைவத்தில் இரண்டு ஜென் சீடர்கள் https://youtu.be/6DVQsFgBPi4.
9. ஒன்றும் கொண்டு வரவில்லையே! https://youtu.be/t4ir-tbDou8
10. குரு-சிஷ்ய உறவு
11. உயிராசையும் இல்லை! பண ஆசையும் இல்லை!
12. கர்வம் அடங்கி அமர்ந்தார் https://youtu.be/C6HSCQrxung
13. யோகப் பயிற்சியே விழிப்புணர்வு தரும் https://youtu.be/K8-ebuziOhc.
14. தேடும் பருவம் இது கண்டீர். https://youtu.be/r6BTjDcnWRI
15. முச்சுஅற்றுச் சிந்தை அற்று
16. ஜென் தியானம் https://youtu.be/HZVTIvwke_Y
17. தேநீர்! விழிப்புணர்ச்சி! அவ்வளவுதான் https://youtu.be/OUQTn-Gi6rU.

18. மனமும் மாயையும். https://youtu.be/EsATPOIW3JI
19. மனவுறுதி https://youtu.be/d7L46-WM0_w
20. கெட்டவழி ஆணவப்பேய் https://youtu.be/8WN_GYdRoSQ
21. பைபிளும் ஜென் ஆசிரியரும் https://youtu.be/xZlbo-E-M3I
22. இயேசுவும் தீர்க்கதரிசியாரும்https://youtu.be/MJeQoAXPZtM
23. நீரும் இல்லை…நிலவும் இல்லை. . https://youtu.be/IrL4-T9wFQg
24. புத்தர் என்றால் என்ன? https://youtu.be/rAZbdsvGM5g
25. போதி தர்மர், மனதைச் சாந்தப்படுத்துகிறார் https://youtu.be/K5ZG_hHhTzA
26. இடிக்க முடியாத மாளிகை https://youtu.be/stJ3LwMaR5A
27. வாய் ஏன் பராபரமே? https://youtu.be/GqlYLL-AKL0
28. நிராசை யின்றேல்தெய்வ முண்டோ?https://youtu.be/HktwDQ7dQKg
29. அவனே ஞானி. https://youtu.be/TUr_w7W0o4c
30. வாக்கற்று மனமும் அற்று https://youtu.be/hH8TfUnjVVY
31. பக்குவப்பட்ட மனம் https://youtu.be/xwFQ9WcHqT8
32. ஞானவிளிம்பில் நிற்கும் துறவி https://youtu.be/UG2JkRIkkI8
33. முக்தியின் வழி எது?https://youtu.be/Xe3bBnhtvEY
34. ஆழமாக சிந்தித்தால் மெஞ்ஞானம்.https://youtu.be/2HePxJyygeQ
35. தாயுமானவர் கையில் எடுத்த ஆயுதம்!https://youtu.be/v89HI-_9jd4
36. புகைபிடிக்கும் ஜென்https://youtu.be/z6SVvGVH4q4
37. ஞானமடைந்த மனிதன் https://youtu.be/WJGWWJwa71Y
38. மனமும் வெளியாகின்றதுhttps://youtu.be/Ph3czRaQMFw
39. வாழ்க்கை வாழ்வதற்கேhttps://youtu.be/jA3QeGhclI4
40. தாயுமானவர் சொல்லும் ”கடந்த நிலை” எது? https://youtu.be/B_FJv6gHXA0
41. அகங்காரத்தை அறுக்க பணிவு வேண்டும்?
42. கள்ளமனம் துள்ளுவது ஏன்?https://youtu.be/pyuzkbJofss
43. பெற்றதை ஏது என்று சொல்வேன்? https://youtu.be/T-d6HYn2CJg
44. மாயை ஒழிய அவன் அருளைப் பெற வேண்டும் –
45. காற்றும் அல்ல, கொடியும் அல்ல https://youtu.be/yW04toFGNWE
46. அகில வாழ்வு அத்தனையும் சொப்பனம் கண்டாய்?
? https://youtu.be/Zey6MX-XvB8

47. பேச்சுப் பிதற்றல்

48. மன்னி அழி யும் ஜகம்-https://youtu.be/hk-q3NXqji0

49. துன்பம் அவசியமா? https://youtu.be/OSZei_Ztuhg

50. தெளிவான ஞான விளக்கம் https://youtu.be/csIF79OL6Js

51. பற்றுவிட்ட மனம் வெளியாகின்றது https://youtu.be/Wn7Oje3C4rI

52. இமைப்பொழுதும் நீங்காத ஜென் https://youtu.be/hUtpYK6JUgg

53. முயற்சி-பயிற்சி – தேர்ச்சி

54. கவிதை எழுதுவது எப்படி?

55. வேண்டுவேன் இந்த உடல்

56. காசப்பாவின் போதனை?https://youtu.be/kv4RSr6vEAA

57. ஒவ்வொரு நாளும் ஆனந்தமே!! https://youtu.be/xu6yvpF1vsw

58. புத்தருக்கு - மனம் ஒரு வேலைக்காரன்தான்

59. யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே

60. ஆணவம் அடங்க பணிவுதான் வேண்டும்? https://youtu.be/SvGT-XpLDAI

61. முயற்சி + பயிற்சி = தவம்.https://youtu.be/Ru1GwxrDMhc

63. ஆணவஇருள் எனும் கடல் https://youtuhttps:/D9N8ij1tQHQ
64. நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் https://youtu.be/9OtZLQlOXC4
65. இன்பநிலை எப்போது வரும்? https://youtu.be/Z2Jk9RbtsMA
66. என்னை யார் என்று அறியாத
அங்கதேசத்தில் https://youtu.be/CEjdTFb4GqM
67. பண்பட்ட மனம் https://youtu.be/HpMRlK0bOAM
68. சலனமற்ற மனம் https://youtu.be/zAy6LkFatHA
69. மனம் பக்குவப்பட என்ன செய்ய
வேண்டும்? https://youtu.be/oum5OjwUpiY
70. உலகு நிலையாமை https://youtu.be/tjtkirQXzb0
71. மனதை அறிந்தால் மனம் வலிமை
பெறும். https://youtu.be/yOc3eX9LWL4
72. மன முடிச்சுகள். https://youtu.be/VTfmeL-s_sg
73. முன் நோக்கிச் செல் https://youtu.be/Ma4Ruk5krYU
74. குணம்இலா மனம் https://youtu.be/9RTITWnc7Bs
75. விரைந்துவரும் ஆனந்தேமே! https://youtu.be/qSQeO_fNiu0
76. எந்தாய் கேள் https://youtu.be/T5Hc-wwF0dY

77. சொர்க்கமா? நரகமா? https://youtu.be/aXNmcbVPsZw
78. இறப்பும் பிறப்பும் பொருந்த https://youtu.be/8VFjAyCdAxM
79. உள்ளம் உருக உபாயம் செய்தாண்டி https://youtu.be/0z0x3x-9eQM
80. தர்க்கமிட்டு குதர்க்கம்விட்டு
81. பூரணம் ஆக்கினான் https://youtu.be/iHepLQVcpVs
82. மௌனம் எனும் மந்திரமொழி https://youtu.be/Wx2RLC064H0
83. கொள்ளை நோயை ஒழித்தல் https://youtu.be/BQMrJVrEa1E
84. முயன்று பெறுவதுதான் பதவி https://youtu.be/uj2ELYSFX8M
85. ஆணவத்தை அடக்கிய புத்தர் https://youtu.be/kCXwHAae7Pk
86. பொய் குற்றச்சாட்டு https://youtu.be/gOqPnZJ80C4
87. --ஆண்டவன் அளித்ததே! https://youtu.be/vZZ25fkkp9g
88. --எதிர்கொண்டு போராடுங்கள் https://youtu.be/ItaQqrO6IqY
89. பொறாமைத் தீணை அணைத்தல் https://youtu.be/Zn1eYOIVW8A
90. மயக்குறும் மனம் அணுகாப் பாதை எது? https://youtu.be/ePNW5Lfq_is
91. பார்வையாளனாக இருங்கள் https://youtu.be/rVOijK8B6jY
92. சேமித்த பிறகு செலவழி. https://youtu.be/V4jyz6CKOFA

94. மாசுஅற்ற அன்பர் நெஞ்சே https://youtu.be/lRSXhq1jMoU
95. ஊசல் ஆடும் மனமே பதற்றமடையும் https://youtu.be/1o35zp-qPUc
96. எனக்கு குரு யாரும் இல்லை. https://youtu.be/mR3gRxWnMmo
97. தெளிவு குருவார்த்தைக் கேட்டல். https://youtu.be/xCZMxYvnQaQ
98. திரும்பப் பெற முடியாதது எது? https://youtu.be/SiaP4pkr4-A
99. அற்றது பற்றெனில் உற்றது வீடு https://youtu.be/hCWutJnei_w
100.பொறாமையா? பதவி ஆசையா? https://youtu.be/ecSn6Ldwq1s
101. தன்னை அறியாது ஜகம் இருந்துவிட்டால் https://youtu.be/JJsHc_BE1rQ
102.இல்லாத ஒன்றிற்கு ஆசைப்பட்டால்…https://youtu.be/xsGncZTdsls
ஜென் என்றால் என்ன? https://youtu.be/z7r5h8n-c1A